# ஜமாஅதுல் முஸ்லிமீனின் அழைப்பு

எங்களது தீர்ப்பாளன் ஒருவன் மாத்திரமே.

அவன் : அல்லாஹ்வையன்றி வேறெவருமில்லை!

எங்களது இமாம் ஒருவர் மாத்திரமே.

அவர் : அல்லாஹ்வின் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களே!

பிரிவுகளின் இமாம்கள் அல்ல!!

எங்களது தீன் ஒன்று மாத்திரமே.

அது : அல்லாஹ்வால் விரும்பப்படும் இஸ்லாமாகும்!

பிரிவினைவாத மத்ஹபுகள் அல்ல!!

எங்களது பெயர் ஒன்றேயாகும்.

அது : அல்லாஹ்வால் சூட்டப்பட்ட "முஸ்லிம்" என்பதேயாகும்!

பிரிவினைவாதப் பெயர்கள் அல்ல!!

எங்களது அன்பின் அடிப்படை ஒன்றேயாகும்.

அது : அல்லாஹ்வுடன் உள்ள உறவேயாகும்!

உலகியல் தொடர்புகள் அல்ல!!

நாம் மகிழ்ச்சியடைவதற்கான காரணம் ஒன்று மாத்திரமே.

அது : “மகத்தான அல்லாஹ்வை விசுவாசிக்கிறோம்” என்பதாகும்!

தேசமோ, மொழியோ அல்ல!!

நீங்கள் இவ்வழைப்பிற்கு உடன்படுகிறீர்கள் என்றால் எங்களுடன் இணைந்து கொள்ளுங்கள்.

# சத்திய ஒழியை நோக்கி ஒன்றுபட வாருங்கள்!

அன்பர்களே!

அண்மை காலமாக உங்கள் மத்தியில் தோன்றியுள்ள ஒரு புதிய கூட்டத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். “ஜமாதுல் முஸ்லிமீன்” (முஸ்லிம்களின் கூட்டமைப்பு) எனக் கூறப்படும் இக்கூட்டம் பற்றி பலரும் பலவாறு விமர்சிக்கிறார்கள். சிலா் “இவர்கள் சொல்வது போல் இக்காலத்தில் வாழ முடியாது” என்கிறார்கள்.

இத்தனைக்கும் மத்தியில் “ஜமாஅதுல் முஸ்லிமீனாகிய” நாங்கள் நேரடியாக உங்களுடன் கதைக்கிறோம். தயவுசெய்து கவனமாக கேளுங்கள்.

நாங்கள் முஸ்லிம்கள், அல்லாஹ்வுக்கு மாத்திரமே அடிபணிபவர்கள். அல்லாஹ் தனது திருமறையாகிய அல்குர்ஆனையும், தனது தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின்

சுன்னாவையும் பின்பற்றி வாழுமாறு கூறுகின்றான். மற்ற எதனையும் பின்பற்றுவதனை எமக்கு அவன் கடமையாக்கவில்லை. எனவே இந்த இரண்டை மாத்திரம் நாங்கள் பின்பற்றி வாழ்கின்றோம். இவ்வாறு வாழ்பவர்களையே அல்லாஹ் முஸ்லிம்கள் என்று கூறுகின்றான். இதற்கு மாறாக அல்லாஹ்வினதும் அவன் தூதரினதும் போதனைகளை மாற்றியமைத்தும், கூட்டிக் குறைத்தும் பின்பற்றுபவர்களையும், தங்கள் மதத் தலைவர்களின் சொந்தக்கருத்துகளை மார்க்கம் என எடுத்துக் கொண்டவர்களையும் "வழிகேடர்கள்" என்றும் "முஷ்ரிக்கள்" என்றும் அல்லாஹ் தனது திருமறையில் தீரப்பளிக்கின்றான்.

உங்களுக்கு முன்னர் வேதம் கொடுக்கப்பட்ட யூதர்களும், கிறிஸ்தவர்களும் அல்லாஹ்வுக்கு அடிபணியாது, தங்களது மத அறிஞர்களியும், துறவிகளையும் "ரப்பு"களாக எடுத்துக்கொண்டதன் காரணமாக அவர்கள் வழிகெட்டுப் போனார்கள் என்பதைப் பற்றி அல்லாஹ் தனது திருமறையில் பின்வருமாறு விபரிக்கின்றான்:

"(யூத, கிரிஸ்தவர்கள்)" தங்களது அறிஞர்களையும், தங்களது துறவிகளையும் அல்லாஹ்வை விடுத்து "ரப்புகளாக" எடுத்துக் கொண்டனர். மர்யமுடைய மகன் மஸீகையும் (ரப்பாக எடுத்துக்கொண்டனர்.) ஒரே இலாஹ்ிற்கு அடிபணியும்படியே அன்றி அவர்கள் ஏவப்படவில்லை. அவனைத் தவிர தகுதியுள்ள எந்த "இலாஹும்" இல்லை. (அவர்கள்) வைக்கக்கூடிய இணைகளை விட்டும் அவன் மிகவும் தூய்மையானவன். ( 9 : 31 )

எனவே ஒரு முஸ்லிம் அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் கட்டளைகளை மாத்திரமே "ஏன்?, எதற்கு?" என்று கேட்காமல் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்ற வேண்டும். ஏனெனில் அவன் அல்லாஹ்வை ரப்பாக ஏற்றுக் கொண்டிருக்கின்றான். அவ்வாறன்றி அவன் தனது மத அறிஞர்கள், இமாம்கள், சூபிமார்கள், அவ்லியாக்கள் ஆகியோர் கூறுகின்ற

கருத்துகளை "ஏன்?, எதற்கு?" என்று கேட்காமல் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுவானேயானால் அவன் அவர்களை "ரப்பாக" எடுத்துக்கொண்டான் என்பதே அதன் பொருளாகும்.

எனவேதான் யார் எதனை கூறினாலும், அது தனது "ரப்பாகிய" அல்லாஹ்வின் கூட்டிற்கு முரண்படுகின்றதா? இல்லையா? என்பதை ஆராய்ந்து பார்த்தே ஒப்புக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் கூட்டிற்கு முரண்பட்டால் அது எவ்வளவு பெரிய அறிஞரின் கூற்றாக இருந்தாலும் அதனை நிராகரித்து விடுவதே ஒரு முஸ்லிமின் பண்பாகும். அடுத்ததாக தனது தூதர்களைப் பயன்பற்றுமாறு அல்லாஹ் கட்டளையிடுகின்றான். ஏனெனில் அல்லாஹ் மனித சமுதாயத்திற்கான தனது ஏவல்கள், விலக்கல்கள் அடங்கிய வழிகாட்டலை இந்தத் தூதர்கள் மூலமாகவே இந்த சமுதாயத்திற்கு வெளிப்படுத்துகின்றான். எனவேதான் தனது தூதர்களுக்கு கட்டுப்பட்டு நடக்குமாறு அல்லாஹ் நம்மை பணிக்கின்றான்.

இந்த வரிசையில் இறுதித் தூதரும், எங்கள் தலைவருமாகிய முஹம்மத் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடக்குமாறு அல்லாஹ் தனது திருமறையில் பின்வருமாரு நமக்கு கட்டளையிடுகின்றான்.

"நீங்கள் நேர்வழி பெறும்பொருட்டு அவரை (தூதரை)ப் பின்பற்றுங்கள்." ( 7 : 58 )

"நீங்கள் அவரை (தூதரை)ப் பின்பற்றினால்(தான்) நேர்வழி பெறுவீர்கள்." ( 24 : 54 )

எனவே மேற்படி அல்லாஹ்வின் "முஸ்லிம்" எனப்படுபவன்மீது, ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுக்கு கட்டுப்பட்டு நடப்பதென்பது அன்னாரது சொல், செயல், அங்கீகாரம் ஆகிய அனைத்தையும் ஏற்று நடப்பதாகும்.

ஆகவே மேலே கூறியவற்றிலிருந்து அல்லாஹ்வின் "கலாம்" ஆகிய அல்குர்ஆனும், அவனது தூதரது சுன்னாவுமே முஸ்லிம்கள் வாழ்வதற்குரிய வழிகாட்டிகளன்றி, வேறு எதுவுமில்லை என்பது தெட்டத் தெளிவாகின்றது. எனவே இந்த அடிப்படையில் உலகம் முடியுமட்டும் இந்த பூமியில் வாழக்கூடிய மனித சமுதாயம் முன்மாதிரியாகக் கொண்டு, பின்பற்றக்கூடிய ஒரு முஸ்லிம் கூட்டத்தை மேற்படி குர்ஆனையும், சுன்னாவையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கி, அதற்குத் தானே தலைமைதாங்கி வழி நடாத்திக் காட்டிய ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் ஒரு உண்மை வரலாறு தக்க ஆதாரங்களுடன் நம் கண் முன்னே இருக்கின்றது.

இதன்படி அன்று அல்லாஹ்வுக்கு இணைவைத்து, பெரும் வழிகேட்டில் வாழ்ந்து கொண்டிருந்த அரபிகளை ரஸூலுல்லாஹி (ஸல்) ஏகத்துவத்தின் பக்கம் அழைப்பு விடுத்தார்கள். இந்த அழைப்பு மக்காவிலும், மதீனாவிலுமாக 23 வருடங்கள் நீடித்தது. குர்ஆனின் வழிகாட்டலுடன் முழு உலகமும் உலக முடிவு வரை பின்பற்றக்கூடிய, முஸ்லிம்களின் கூட்டமைப்பொன்று பல்வேறு தியாகங்களுக்கும், சிரமங்களுக்கும் மத்தியில் உருவாக்கப்பட்டது. அது ஒரே தலைவர், ஒரே கூட்டம், ஒரே கொள்கையாக காணப்பட்டது. அதில் எவ்வித பிரிவினையும் கிடையாது. இவர்கள்தான் முஸ்லிம்கள் என்பதனை எல்லாக்காலங்களிலும் வாழக்கூடியோர் தெரிந்து கொள்ளும் பொருட்டு இது ஆணித்தரமாக வலியுறுத்தப்பட்டது.

தனது மரணத்திற்குப் பிறகும் முஸ்லிம்கள் எக்காரணத்தைக் கொண்டும் பிரிந்து விடாது, ஒரே தலைமைத்துவத்திற்கு கட்டுப்பட்டு அதாவது ஒரே அமீருக்குக் கட்டுப்பட்டு ஒரே கூட்டமாக வாழ வேண்டும் என்பதை ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் வழியுருத்தியுள்ளார்கள். ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் கூறுவதாவது :

“யார் அமீருக்குக் கட்டுப்படுகின்றாரோ அவர் எனக்குக் கட்டுபட்டவராவார், யார் அமீருக்கு மாறு செய்கின்றாரோ அவர் எனக்கு மாறு செய்கின்றார்.”

( ஸஹீஹ் முஸ்லிம் )

“காய்ந்த திராட்சையை போன்ற தலையைக்கொண்ட, கருத்தட “நீக்ரோ” அடிமை ஒருவர் உங்களுக்கு அமீராக நியமிக்கப்பட்டாலும் அவர் அல்லாஹ்வின் வேதத்தைக் கொண்டு வழிநடாத்தும் காலமெல்லாம் அவருக்கு கீழ்படியுங்கள், அவர் சொல்லுக்கு செவி மடுங்கள்.”

எனவே முஸ்லிம்கள் எல்லாக் காலங்களிலும் ஒரு அமீருக்குக் கட்டுபட்டவர்களாகவே இருக்க வேண்டும். ஒருபோதும் பிரிந்து விடக்கூடாது. அவ்வாறு பிரிந்து செல்வதை அல்லாஹ் தனது திருமறையில் பல்வேறு இடங்களில் கண்டிக்கின்றான்.

“எவர்கள் தங்கள் மார்க்கத்தை (தங்கள் இஷ்டப்படி பலவாறாக) பிரித்து, (அவர்களும்) பல பிரிவுகளாக பிரிந்து விட்டனரோ, அவர்களுடன் உமக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை. அவர்களுடைய விடையம் எல்லாம் அல்லாஹ்விடமே இருக்கின்றது. அவர்கள் செய்துகொண்டிருந்த(இத்தீய)வற்றை பற்றி பின்னர் அவன் அவர்களுக்கு அறிவித்து விடுவான்.” ( 6 : 159 )

ஒரு சமுதாயம் எப்போதும் ஒரு தலைமைத்துவ கட்டுப்பாட்டை இழந்து, பல பிரிவுகளாக பிரிந்து, பல தலைவர்களுக்குக் கட்டுப்படக் கூடியவர்களாக மாறுகின்றதோ, அபோது அந்த சமுதாயம் பலவீனமடைந்து அழிந்து என்பதற்கு இந்த முஸ்லிம் சமுதாயமே போதுமான சான்றாகும். அதாவது

ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்திலும் நேர்வழி நடந்த ஹலீபாக்களின் காலத்திலும் முஸ்லிம்கள் ஒரே தலைவருக்குக் கட்டுப்பட்டு, ஒரு கூட்டமாக இருந்தார்கள். எனவே சென்ற இடமெல்லாம் வெற்றி வாகை சூடினார்கள், உலகமே முஸ்லிம்களின் காலடியில் மண்டியிட்டது. செல்வங்கள் குவிந்தன. இவற்றிற்கெல்லாம் காரணம் அவர்கள் மார்க்க வரம்பை மீறாது கட்டுப்பாட்டுடன் வாழ்ந்ததேயாகும். மேலும் அவர்கள் ஒழுக்க சீலர்களாகவும் காணப்பட்டார்கள். அவர்களின் நடத்தையைக் கண்டே நிராகரிப்பாளர்கள் இஸ்லாத்தில் நுழைந்தார்கள். குர்ஆனும், சுன்னாவுமே இவர்களுக்கு வழிகாட்டியாய் அமைந்ததன. அக்காலத்திலே இன்று உள்ளதைப போன்று மத்ஹபுகலோ, தக்ரீக்காக்களோ, இயக்கங்களோ இருக்கவில்லை. எந்தப் பிரச்சினைக்கும் குர்ஆனிலும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சுன்னாவிளுமே மக்கள் தீர்வைப் பெற்றுக் கொண்டார்கள்.

பின்னால் தோன்றிய காலங்களில் படிப்படியாக முஸ்லிம்கள் உலக இன்பங்களில் மூழ்கத் தொண்டங்கினர். தீன் அவர்களிடமிருந்து மெல்ல மெல்ல நழுவியது. இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களின் எதிரிகளான யூதர்களும், கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களுக்குள் ஊடுறுவி பொய்யான ஹதீஸ்களையும், போலி வரலாறுகளையும் கட்டுக்கதைகளையும் பரப்பி மார்க்கத்தில் குழப்பத்தை உண்டாக்கினர். அக்காலத்தில் வாழ்ந்த மார்க்க அறிஞர்களில் அதிகமானவர்கள் ஆட்சியாளர்களின் அசத்தியப் போக்கிற்கு ஆதரவு வழங்கக் கூடியவர்களாக இருந்தாலும் கூட சத்தியத்தை தம்மால் முடிந்தவரை எடுத்துச் செல்லக்கூடிய உலமாக்களும் காணப்படவே செய்தனர். இவ்வாறு சத்தியத்தை எடுத்துச் சொன்ன மார்க்க அறிஞர்கள், அசத்தியத்திலே சென்றுவிட்ட ஆட்சியாளர்களால் தண்டிக்கப்பட்டனர். இவ்வாறு ஆட்சியாளர்களால் தண்டிக்கப்பட்ட மார்க்க அறிஞர்களில் இமாம் ஷாபி, இமாம் மாலிக், இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் போன்றோரும் அடங்குவர். இவர்கள் மார்க்கப் பிரச்சினைகளுக்கு தம்மிடமிருந்த ஆதர்ணகளிக் கொண்டு தீர்ப்பு வழங்கினர். மக்களும் இவர்களின் தீர்ப்பை மதித்து இவர்களின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டனர். இந்த இமாம்களின் மறைவிற்குப் பின்னால் நீண்டதொரு காலம்

கடந்ததன் பின்னர் இந்த இமாம்களின் பெயரால் பல சட்ட நூல்கள் எழுதப்பட்டன. இந்நூல்களில் காணப்படும் சட்டதிட்டங்களின் அனேகமானவை குர்ஆன், ஹதீஸிற்கு முரணானவை. பொய்யும், மெய்யும் கலந்து எழுதப்பட்ட இந்த கிதாபுகளை ஆதாரமாக வைத்து “மத்ஹபுகள்” எனும் அமைப்புகள் உருவாக்கப்பட்டு, அம்மத்ஹபுகள் வளர்க்கப்பட்டன. இவ்வாறு ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய மரணத்திற்குப் பின்னர் பல நூற்றாண்டுகள் கழித்து உருவாக்கப்பட்ட மத்ஹபுகளுக்கென தனித்தனி மத்ரஸாக்களும், பள்ளிகளும் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு மத்ஹபினரும் தத்தமது மத்ரஸாக்களில் தமது பிரிவைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்ட சட்ட நூல்களையே கற்பித்தனர்.

குர்ஆனிற்கும், ஹதீஸிற்கும் முரணான பல சட்டங்கள் இந்த நூல்களில் காணப்பட்டாலும் கூட அவை மத்ஹபுகள் என்ற பெயரால் சரி காணப்பட்டு கற்பித்து கொடுக்கப்பட்டன. இன்றுள்ள ஆலிம்களில் அநேகமானோர் இத்தகைய மத்ரஸாக்களில் ஓதிப் பட்டம் பெற்றவர்கலேயாவர்.

ஆனால் எந்த இமாம்களின் பெயரால் மத்ஹபுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளனவோ அந்த இமாம்கள் ஒருபோதும் “என்கலலஹ்டான் இந்த மத்ஹபுகள் உருவாக்கப்பட்டன” என்றோ, அல்லது “இந்த மத்ஹபுகளைப் பின்பற்றுங்கள்” என்றோ கூறவில்லை. இந்த மத்ஹபுகளுக்கும் அந்த இமாம்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. முஸ்லிம்களுக்கு மத்தியில் பொய்யையும், கற்பனைகளையும் பரப்பி அவர்களை வழிகெடுத்து பிளவுபடுதுவத்றகாக இஸ்லாத்தின் விரோதிகளால் உருவாக்கப்பட்ட இந்த மத்ஹபுகளை, உண்மை என நம்பி மத்ஹபுவாசிகளின் மத்ரஸாக்களில் கற்றோர் ஏமாந்துள்ளனர். பல்லாண்டுகளாக வாழ்ந்து மறைந்த இந்த உலமாக்கள் தாமும் வழிகெட்டு, இந்த சமுதாயத்தை வழிகெடுத்துள்ளனர். இதனால்தான் குர்ஆன், சுன்னாவை பின்பற்றி வாழ வேண்டிய சமுதாயம், பெயரோ, முகவரியோ இல்லாதவர்களின் கிதாபுகளைப் பின்பற்றி வாழ்ந்து, சீர்கெட்டு விட்டது. இந்த அவல நிலையை இன்று “ஜமாஅதுல் முஸ்லிமீனைச்” சேர்ந்த உலமாக்கள் சுட்டிக்காட்டியதற்குப் பின்னர்

இன்றைய உலமாக்களில் உண்மையிலேயே அல்லாஹ்வுக்கு பயப்படக்கூடியோர் சத்தியத்தை ஏற்கின்றனர்.

அன்புள்ளவர்க்ளே!

மேலே நாம் கூறியவற்றை மனதில் கொண்டு "முஸ்லிம் சமுதாயம்" என நீங்கள் கருதிக் கொண்டிருக்கும் இன்றைய சமுதாயத்தை ஒருமுறை நோட்டமிட்டுப் பாருங்கள். உலகத்தின் ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் சிந்தித்துப் பாருங்கள். சில நாடுகளில் பெரும்பான்மையாகவும், மற்றும் சில நாடுகளில் சிறுபான்மையாகவும் இந்த சமுதாயம் வாழ்கின்றது. உலகத்தின் எந்தவொரு இடத்திலாவது, ஏன் புனிதத்தலங்களான மக்கா, மதீனாவிலாவது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களால் கருதப்பட்ட தூய இஸ்லாம் இன்று நடைமுறையில் இருக்கின்றதா? இல்லவே இல்லை. இதற்கு என்ன காரணம்? நீண்ட நெடுங்காலமாக திட்டமிட்ட அடிப்படியில் இஸ்லாத்தின் அடித்தளமே தகர்க்கப்பட்டுள்ளது. அத்திவாரமே சிதைக்கப்பட்டுள்ளது. எந்தக் காரியங்களைச் செய்தால் அவை எம்மை இஸ்லாத்தை விட்டும் வெளியேற்றி விடுமோ அக்காரியங்கள் இன்று சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன. தொழுகையை விடுதல், சாஸ்திரம் பார்த்தல், தாயத்துக் கட்டுதல், அல்லாஹ் அல்லாதவர்களுக்கு நேர்ச்சை செய்தல், சூனியம் செய்தல் போன்ற விடயங்கள் இன்று சர்வசாதாரணமாகி விட்டன. "குப்ரை" உண்டாக்கும் இக்கொடிய விடயங்கள் பாமரர்கள் மாத்திரமன்றி "ஆலிம்கள்" எனக்க கூறப்படும் சிலரும் செய்து மக்களை ஏமாற்றி வயிறு வளர்க்கின்றனர். குடி, சூது, விபச்சாரம் போன்றவை எங்கும் பரவலாகிவிட்டன. கஞ்சாக் குடிப்பதையும், கஞ்சாக் கோப்பி குடிப்பதையும், தாடி வைத்து, தொப்பி அணிந்தவர்களில் சிலர் கூட வழக்கமாக்கிக் கொண்டுள்ளார்கள்.

விளையாட்டிற்குக் கூட பொய் சொல்வதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. பொய் சொல்வதை இஸ்லாம் பெரும்பாவமாக கருதுகின்றது. ஒருமுறை ரஸூலுல்லாஹ் (ஸல்) தனது தோழர்களை நோக்கி "பெரும்பெரும் பாவங்களை உங்களுக்கு

சுட்டிக்காட்டட்டுமா?” எனக்கேட்டார்கள். அதற்கவர்கள் “ஆம்" எனக்கூறவே “அல்லாஹ்வுக்கு இணைவைத்தல், பெற்றோருக்கு நோவினை செய்தல்” எனக் கூறிவிட்டு, சாய்ந்திருந்த ரஸூலுல்லாஹ்(ஸல்) அவர்கள் எழுந்து அமர்ந்து கொண்டு “பொய் கூறுவதும், பொய்சாட்சி சொல்வதும்” எனக் கூறிக்கொண்டேயிருந்தார்கள். இதனை மீட்டி மீட்டிக் கூறுவதை நிறுத்த மாட்டார்களா? என நபித்தோழர்கள் நினைக்குமலவிற்குக் கூறிக்கொண்டேயிருந்தார்கள்.

(சஹீஹுல் புஹாரி)

ஆனால் இன்று தம்மை முஸ்லிம் என்று கூறிக்கொள்ளும் வியாபாரிகளில் அனேகமானோர் “பொய் இல்லாமல் வியாபாரம் செய்ய முடியாது” என்று சர்வ சாதாரணமாக கூறுகின்றார்கள். இன்று வியாபாரம் கொடுக்கல், வாங்கலில் பொய், புரட்டு, ஏமாற்று, பதுக்கி வைத்தல், கலப்படம் செய்தல் போன்றவை எங்கும் பரந்து காணப்படுகின்றன. அதே போல் மிகக் கொடிய பாவமாக இஸ்லாம் கருதக்கூடிய வட்டி தவிர்க்க முடியாத ஒன்றாக இந்த சமுதாயத்தில் வேரூண்றி விட்டது. எங்கும் எதிலும் வட்டி கலந்திருக்கின்றது. ஆடம்பரமான திருமணச் செலவுகளுக்குக் கூட வட்டிக்குப் பணம் பெறப்படுகின்றது. வட்டிகளிலேயே இயங்கும் வங்கிகளில் தம்மை முஸ்லிம்கள் எனக் கூறிக்கொள்வோர் “மனேஜர்”களாகவும், அதிகாரிகளாகவும், ஊழியர்களாகவும் கடமை புரிகின்றார்கள். வங்கிகளிலே அடகு வைக்கும் பகுதிகளிலும், வட்டியுடன் கூடிய கடன் கடன் பெறும் பகுதிகளிலும் இந்த சமூகத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையே கூடுதலாக காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல திருமணச் சடங்கு, மரணச் சடங்கு உட்பட சகல உடை, நடை, பாவனை அனைத்திலும் அந்நியரின் நடைமுறைகள் இரண்டறக் கலந்துவிட்டன. இஸ்லாம் வெறுத்து ஒதுக்கிய இசையும், ஆபாசமும், வீண் கேளிக்கைகளும் “டெலிவிஷன்” எனும் உருவத்தில் சகல வீடுகளுக்குள்ளும் புகுந்து விட்டன. வயது வந்த ஆண்கள், பெண்கள் மட்டுமன்றி சிறு பிள்ளைகள் கூட ஆபாச காட்சிகளைப் பார்த்து மனம்கெட்டு சீரழிகின்றனர். எனவே சுருக்கமாக சொல்வதென்றால் பெயரளவில் மாத்திரமே அன்றி

இன்று உலகில் இஸ்லாம் இல்லை என்பதை தெளிவான சிந்தனையுடைய எவரும் மறுக்க முடியாது.

இதே நேரத்தில் "இஸ்லாத்தை உலகத்தில் மீண்டும் நிலை நிறுத்த வேண்டும்" என பல இயக்கங்கள் உருவாகி, உலகின் பல நாடுகளிலும், நீண்ட காலங்களாக முயற்சி செய்து வருகின்றன. மக்களிலும் ஒரு பகுதியினர் இவ்வியக்கங்களின் உபதேசங்களை நம்பி அவன்றின் பின்னால் செல்கின்றன. "தப்லீஃ ஜமாஅத்" , "ஜமாஅதே இஸ்லாமி" , "தௌஹீத் ஜமாஅத்" , "இஹ்வானுல் முஸ்லிமீன்" என்பன போன்ற பல இயக்கங்கள் இவ்வாறு இயங்குகின்றன. இலட்சக்கணக்கான மக்கள் இவற்றில் பின்னால் செல்கின்றனர். ஆனால் இவற்றால் அடிப்படை மாற்றங்கல் எதுவும் நடக்கவில்லை.

இந்த இயக்கங்களும் உண்மையான இஸ்லாமிய வழி முறைகளை கைவிட்டு, தாங்களாக வைத்துக்கொண்ட சில விதிமுறைகளை வைத்துக்கொண்டு, "இதுதான் இஸ்லாம்" எனக் கூறுகின்றனர். எனவே இவ்வியக்கங்களால் அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தவும் முடியாது. எந்தவொரு விடயமாக இருந்தாலும் அல்லாஹ்வும் அவனது தூதராகிய ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களும் காட்டிய வழியைப் பின்பற்றிச் செய்வதன் மூலமே அதில் நாம் வெற்றி காண முடியும். மாறாக மனிதர்கள் தாங்களாக வகுத்துக்கொண்ட வழிகளால் ஒருபோதும் முழுமையான வெற்றியைப் பெறமுடியாது. மக்கள் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, இருந்த ஓரளவு ஒற்றுமை கூட சிதைக்கப்பட்டதைத் தவிர வேறு எந்தப் பலனையும் இந்த இயக்கங்கள் மூலம் சமுதாயம் பெறவில்லை.

எனவேதான் நாம் கூறுகின்றோம், அன்று அரபு நாட்டில் வாழ்ந்த அறிவற்ற சமூகத்தின் மத்தியில் இஸ்லாத்தை நிலை நாட்ட ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் எந்த நடைமுறையை கையாண்டார்களோ, அதே நடைமுறையால் மாத்திரமே மீண்டும்

இஸ்லாத்தை உலகில் நிலை பெறச் செய்யமுடியும். அதுவே நாம் கைக்கொள்ளும் வழியுமாகும். இஸ்லாத்தை அது எவ்வாறு அத்திவாரம் இடப்பட்டு முழுமையானதொரு கட்டிடமாக கட்டடப்பட்டதோ, அதே விதத்தில் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களைப் பின்பற்றி மீண்டும் அந்த இஸ்லாம் கட்டியெழுப்பப்பட வேண்டும். வெறும் நுணிப்புல் மேய்வதால் எவ்விதபயனும் ஏற்படப் போவதில்லை.

இவ்வாறு ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் காட்டித் தந்த பாதையில் அணுவும பிசகாது இஸ்லாம் மீண்டும் கட்டியெழுப்பப் படுகின்றது. இதனை "ஜமாஅதுல் முஸ்லிமீன்" இன்று உலகில் செய்துகொண்டிருக்கிறது.

இந்த கடமையை காலத்திற்கு காலம் தோன்றக்கூடிய "ஜமாஅதுல் முஸ்லிமீன்" செய்து கொண்டிருக்கும். எனவே அந்த "ஜமாஅதுல் முஸ்லிமீனோடு" ஒவ்வொரு மனிதனும் இணைந்து கொள்ளும்படி ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அவர்கள் கட்டலையிட்டுச் சென்றுள்ளார்கள். அந்த ஜமாஅதுல் முஸ்லிமீனைப் பற்றி நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக "ஜமாஅதுல் முஸ்லிமீனின்" நடைமுறைகளை சுருக்கமாக உங்கள கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றோம்.

அகில உலக ரீதியில் எமக்கென ஒரு அமீர் (தலைவர்) இருக்கின்றார். அவர் தவிர ஒவ்வொறு நாட்டிற்கும், ஒவ்வொரு பிரதேசத்திற்குமாக அந்த உலக அமீருக்குக் கட்டுப்பட்ட அமீர்கள் இருக்கின்றார்கள். ஜமாஅதுல் முஸ்லிமீனில் இணைந்து கொள்ள விரும்பும் எவரும் இந்த அமீர்களுடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும். அதாவது, "அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடப்பதாகவும், பாவமில்லாத விடயங்களில் அமிருக்குக் கட்டுப்பட்டு நடப்பதாகவும்" பைஅத் (உடன்படிக்கை) செய்துகொள்ள வேண்டும். இதுவே முஸ்லிம்களின் கூட்டமைப்பில் ஒருவர் சேர்ந்து கொள்ளும் முறையாகும். இது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களால் காட்டித் தரப்பட்ட நடைமுறையாகும்.

ஜமாஅதுல் முஸ்லிமீனோடு இணைந்து கொண்ட ஒருவர் இதுவரை தான் வாழ்ந்த வாழ்க்கை முறையை மீண்டும் முழுமையாக மறு பரிசீலனை செய்ய வேண்டும். இயக்கங்கள், மத்ஹபுகள், தரீக்காக்கள் போன்றவற்றின் தொடர்புகளை அறவே நீக்கிவிட்டு அல்லாஹ்வின் வேதமாகிய அல்குர்ஆனின் பாலும் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் சுன்னாவின் பாலும் முற்றாகச் சாய்ந்து விட வேண்டும். குர்ஆனிற்கும், ஹதீஸிற்கும் முரணான சகல விதமான நம்பிக்கைகள், வணக்க வழிபாடுகள், செயற்பாடுகள் அனைத்தையும் விட்டுத் தவிர்ந்து கொள்ள வேண்டும். மரணம் வரும் வரைக்கும் தனது ஒவ்வொரு செயலையும் குர்ஆன், சுன்னாவின் வழிகாட்டலின்படி அமைத்துக்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஒரே அமீரின் கீழ் ஒரே கூட்டமாக, ஒரே கொள்கையைப் பின்பற்றி வாழும் முஸ்லிம்களின் கூட்ட்மைப்பாகிய "ஜமாஅதுல் முஸ்லிமீனில்" இணைந்து கொள்வதற்காக அல்லாஹ்வின் அருளைப் பெற்ற, அல்லாஹ்வுடைய அச்சமுடைய மக்கள் சகல விதமான வழி கேடுகளிலிருந்தும் விடுபட்டு வந்து கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய மக்களுக்கு மத்தியில் இஸ்லாமிய சகோதரத்துவத்தை நீங்கள் காணலாம். நீண்ட காலமாக விடுபட்டுப் போயிருந்த ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் சுன்னாக்களை நீங்கள் காணலாம். ஆடம்பரமற்ற வீண்விரயமற்ற வாழ்க்கை முறைகளைக் காணலாம். அனைத்திற்கும் மேலாக உலகிலே காணப்படும் பள்ளிவாசல்கள் உட்பட ஏனைய அனேகமான இடங்களிலும் மார்க்கத்தின் பெயரால் செய்யப்படும் பித்அத்துகளுக்கும், தவறான வழிமுறைகளுக்கும் மாற்றமாக குர்ஆன், சுன்னாவின் ஆதாரங்களின் அடிப்படியில் அமைந்த தூய்மையான, சரியான வணக்க வழிபாடுகளை இந்த ஒரு கூட்டத்தில் நீங்கள் காணலாம். கைக்கூலி இல்லாமல், அனாச்சாரங்கள் இல்லாமல் நடக்கும் முழுமையான இஸ்லாமியத் திருமணங்களைக் கூட இந்த ஒரு கூட்டத்திலேயே நீங்கள்

காணலாம். கைக்கூலி இஅல்லாமல், அனாச்சாரங்கள் இல்லாமல் நடக்கும் முழுமையாக இஸ்லாமியத் திருமணங்களைக் கூட இந்த ஒரு கூட்டத்திலேயே நீங்கள் காணலாம்.

நாம் ஒவ்வொருவரும் மரணத்தை எதிர் நோக்கிக் கொண்டிருக்கின்றோம். மரணத்தின் பின்னால் நிச்சயமாக நாம் அல்லாஹ்றவை சந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே அல்லாஹ்றவின் திருயுப்தியைப் பெற்றுகொள்வதற்கு, மரணிப்பதற்கு முன்னால் அல்லாஹ்ற எமக்குக் கூறும் நிபந்தனையைப் பாருங்கள்.

“நிச்சயமாக அல்லாஹ்ற உங்களுக்காக இஸ்லாத்தையே தேர்ந்தெடுக்கின்றான். எனவே நீங்கள் (உண்மையான) முஸ்லிம்களாகவே அன்றி மரணிக்கதீர்கள்.” ( 2 : 132 )

ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களும் தங்களது கடைசி காலத்தின் போது தம் தோழர்களை நோக்கி “உங்களிடையே இரண்டு விடயங்களை விட்டுச் செல்கின்றேன். அவ்விரண்டையும் பின்பற்றி நடக்கும் காலமெல்லாம் நீங்கள் வழி தவற மாட்டீர்கள். அவைதான் அல்லாஹ்றவின் வேதமாகிய அல்குர்ஆனும், எனது வழிமுரையாகிய ஸுன்னாவுமாகும்” எனக் கூறினார்கள்.

அனால் இன்று முஸ்லிம்கள் எனக்கூறிக்கொள்ளும் இந்த சமூகத்தை நீங்கள் கவனித்தீர்களா? குர்ஆணையும், சுன்னவையும் விட்டு விடுவதன் காரணமாக இந்த சமுதாயம் வழி தவறிச் சென்று கொண்டிருக்கின்றது. இந்த சமுதாயத்தினது ஒவ்வொரு செயலிலும் குர்ஆணினதும், ஸுன்னாவினதும் வழிகாட்டலுக்கு பதிலாக அந்நிய நடை முறைகளையே காண முடிகின்றது.

எனவேதான் இப்பிழையான வாழ்க்கை முறையை விடுத்து நேரான பாதையின்பால் “ஜமாஅதுல் முஸ்லிமீன்” உங்களை அழைக்கின்றது. ஒவ்வொரு மனிதனும் உண்மை முஸ்லிமாக

மரணிப்பதற்கு, ஜமாஅதுல் முஸ்லிமீனில் இணைந்து அல்லாஹ்வுடைய வேதத்தை பின்பற்றி நடப்பதுதான் இருக்கின்ற ஒரே வழியாகும். இவ்வுண்மையை உறுதியாகவும், தெளிவாகவும் மக்கள் முன் நாம் எடுத்து வைக்கின்றோம். கண்ணை மூடிக்கொண்டு இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுமாறு உங்களிடம் நாங்கள் கூறவில்லை. மாறாக "நாம் கூறக்கூடிய சத்தியத்தைப் பற்றி தெளிவு பெறுங்கள், கலந்துரையாடுங்கள், மேலதிக விபரங்களைத் தேடுங்கள், அலசி ஆராய்ச்சி செய்யுங்கள். இறுதியில் இந்த சத்தியத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என்பதே நாம் உங்களிடம் கேட்டுக்கொள்ளும் பணிவான வேண்டுகோளாகும். ஏனெனில் உண்மையான முஸ்லிம்களாக மரணிக்காத எவரும் அல்லாஹ்விடம் வெற்றி பெற முடியாது என்பது நாம் யாவரும் அறிந்த உண்மையாகும்.

நாம் முன்வைக்கும் தூய இஸ்லாம் பற்றி எம்முடன் கலந்துரையாடுவதற்கு நீங்கள் எப்போதும் எங்களுடன் தொடர்பு கொள்ளலாம். நேரான பாதையில் நாம் நடப்பதுடன், சுவனம் செல்லும் ஆசையுடன் தவறான பாதையிலே செல்வோருக்கு நேரான பாதையை காண்பிப்பதுமே எமது நோக்கமாகும். உலக வாழ்வு அழிந்து விடக்கூடியது. மறுமை வாழ்வே நிலையானது. எனவே மறுமை வாழ்வின் வெற்றிக்காக நாம் முன்வைக்கும் இவ்வழைப்பை தூய மனதுடன் விளங்கி, ஏற்று, வெற்றி பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள். குர்ஆன், ஹதீஸ் ஒளியில் தவறுகள் காணப்படுமானால் அவற்றை திருத்துவதற்கும் நாம் தயாராகவே உள்ளோம். எமது நோக்கமெல்லாம் மறுமையில் அல்லாஹ்விடம் வெற்றி பெற வேண்டும் என்பதைத் தவிர நாம் கொண்ட கொள்கையில் அது தவறு என நிரூபிக்கப்பட்டும் அதில் அடம்பிடிப்பதல்ல. "அல்லாஹ்வின் பாதையில் முயற்சி செய்யக்கூடியோருக்கு நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய நேர்வழியைக் காட்டுவான்" என அல்குர்ஆனில் அல்லாஹ் வாக்குறுதி அளிக்கிறான். அத்தகையோரில் நீங்களும் ஆகவேண்டும் என்பது எமது பிரார்த்தனையாகும்.